2. அரசினர் தீர்மானம்.

பேரவை அலுவலில் மாற்றம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 1 "வினாக்கள்—விடைகள்" மற்றும் இனம் 2 "அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் குறித்து கவன ஈர்ப்பு" ஆகியவற்றை ஒத்திவைத்து, இனம் 3—1987-88 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும், வாக்கெடுப்பும் மட்டும் எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

3. அறிவிப்பு.

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேரவைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவையில் (Senate) ஏற்பட்டுள்ள மூன்று வெற்றிடங்களுக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து மூவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

இம்மூன்று வெற்றிடங்களுக்குக் கீழ்க்காணும் உறுப்பினர்களிடமிருந்து வேட்புத் தாள்கள் வரப்பெற்று, அனுமதிக்கப் பெற்றுள்ளன :—

1. திரு. சா. ஞானசுந்தரம்
2. திரு. துரை அன்பரசன்
3. திரு. சு. சிவராஜ்
4. டாக்டர் ந. மாசிலாமணி
5. திரு. எஸ். ஜெயச்சந்திரன்